ம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சி

சிவமயம்

ஸ்ரீ சம்ஹார மகா கால பைரவர் பீடம்

ஸ்ரீ ஆனந்தவள்ளி உடனுறை அகஸ்தீஸ்வரர் ஆலயம்

பொழிச்சலூர், சென்னை-74.

சம்ஹார மகா கால பைரவர் ஆலயம்

அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக அழைப்பிதழ்

விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

பைரவர் துதி

பணம் தரும் பைரவர் பாதமலர் பணிந்திடின்
பதவிகள் ஓடிவரும்
சினம் தரும் பெரும்பகை சீக்கிரம் மறைந்திடும்
சிரிப்புடன் உறவு வரும்
குணம் தரும் நலம் தரும் குடிதரும் - புகழ்தரும்
கோபுர வாழ்வு தரும்
தினம்தோறும் பைரவர் திருவடி பணிவோம்
ஜெகத்தினில் உயர்ந்திடுவோம்.

பேரன்புடையீர் சென்னை பல்லாவரம் அருகாமையில் சோழ மன்னர் ஆட்சி புரிந்த காலகட்டத்தில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் முன்னோர்களால் நிர்மாணம் செய்ய பெற்ற பொழிச்சலூர் என்றும் வட திருநள்ளாறு என்றும் புகழ் பெற்றதுமான ஸ்ரீ ஆனந்தவள்ளி உடனுறை ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் சனீஸ்வரருக்கு தனி சன்னிதி சிறப்புடையதாகும். மேற்படி ஆலயத்தில் தற்பொழுது அகஸ்தீஸ்வரர் கோவிலின் காவல் தெய்வமாகவும், காக்கும் கடவுளாகவும், எனது கனவில் தோன்றி எனக்கு அருள்பாலித்து கோவிலையும் அதன் நிர்வாகத்தினையும் என்னையும், எதிரிகளிடமிருந்து காத்து கொள்வதற்கும், எனக்கு அறிந்து தவறிழைப்போரைத் தண்டித்தும், முடக்கி வைத்தும், எனக்கு பக்கபலமாக இருந்து பைரவர்கள் அருள்பாலித்துகொண்டும், எனக்கு வரும் ஆபத்துகளை தாங்கி உயிர் துறந்து கொண்டு எதிரிகளை தண்டித்துக்கொண்டு தற்பொழுது காலபைரவர் வழி நடத்தி வருகின்றார். தற்பொழுது சம்ஹார காலபைரவராக சுய உருப்பெற்று எழுந்தருளியுள்ள பைரவருக்கு, கர்ப்பகிரகம் அமைத்து, விமானம் அமைத்து திருப்பணி நிறைவு பெற்று ஜய வருடம் சித்திரை 5-ம் தேதி (18-4-2014) வெள்ளிக்கிழமை திருதியை திதி அனுஷ நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை மணி 9.30க்கு மேல் 10.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இறை அன்பர்கள் கலந்துகொண்டு பேரானந்தப் பெறுவாழ்வு பெற அழைக்கின்றோம்.

மழ ராமமழ ராமமழ ராமமழ ராமமழ ★ ராமமழ ராமமழ ராமமழ ரா

ம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சிவமயம் சி

த.தேதி	ஆ.தேதி	நிகழ்வுகள்
சித்திரை 4	17-04-2014	காலை 9.00 மணிக்கு அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை தனபூஜை கணபதி ஹோமம் பூர்ணாகுதி தீபஸ்தாபணம். மாலை 4.30 மணிக்கு வாஸ்த்து சாந்தி ரக்ஷா பந்தணம் கும்ப அலங்காரம் முதற்காலம் ஆரம்பம் 7.30 மணிக்கு தச தரிசனம் 9.00 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை பிரசாதம் வழங்குதல்.
சித்திரை 5	18-04-2014	காலை 7.00 மணிக்கு கோபூஜை லெட்சுமி பூஜை காலை 8.30 ஸ்பரிசகுதி ரவியாகுதி தீபாராதனை காலை 9.15 மேல் யாத்ராதாணம் கெடம் புறப்பாடு 10.10 மணிக்கு விமான கும்பாபிஷேகம், காலை 10.20 மூலவர் கும்பாபிஷேகம். பிரசாதம் வழங்குதல், பகல் 12.00 மணிக்கு மகாபிஷேகம். மாலை 6.00 மணிக்கு சந்தனகாப்பு அலங்காரம் தீபாராதனை நடைபெறும்.
சித்திரை 6	19-04-2014	முதல் நாற்பத்தைந்து நாட்கள் மண்டல பூஜை நடைபெறும்.

இப்படிக்கு

கு. விஜயகுமார்
பரம்பரை தர்மகர்த்தா

சத்ரு சம்ஹார சிவஸ்ரீ குமாரசுவாமி சண்முகவேல்
சம்ஹார மகா கால பைரவர் பீடம்
தொண்டை மண்டல நிர்வாக பரம்பரை தர்மகர்த்தா
ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் மற்றும் வகையறா கோவில்கள்.

சர்வசாதகம்
S. பாலசுப்ரமணிய குருக்கள்
கடியாபட்டி

அமைப்பு உதவி
S. பசுபதி

மழ ராமமழ ராமமழ ராமமழ ராமமழ ★ ராமமழ ராமமழ ராமமழ ராமமழ ரா